**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,**

**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.112/2013 நாள்: 27.08.2019

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன் பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | | |
| கணவர் பெயர் | : செல்வம் | | |
| கிராமம் : | | தாலுக்கா : | |
| வயது : | | வேலை : | |

**4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எந்த தேதியில் எங்கு பிறந்தேன் என்றால், ஊத்தங்கரை ஜனார்த்தனன் மருத்துவமனையில் 1974 ஆம் வருடம் பிறந்தேன், தேதி மாதம் எனக்கு தெரியவில்லை. என்னுடைய பிறப்பு சான்றிதழ் என்னிடம் இருக்கிறதா என்றால் எனக்கு தெரியவில்லை வாங்கி வைத்துள்ளார்களா என்று கேட்டால் தான் தெரியும். மாணிக்கத்திற்கு பச்சையம்மாள் என்ன உறவென்றால் மனைவியாவார் அதேபோல் சந்திரமதியும் மாணிக்கத்தின் மனைவியாவார். நான் எனது வழக்குரையில் பச்சையம்மாளும் மாணிக்கத்தின் மனைவிதான் என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது வழக்குரையில் மாணிக்கத்தின் முதல் மனைவி சந்திரமதி என்றும் இரண்டாம் மனைவி பச்சையம்மாள் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மாணிக்கத்திற்கு பச்சையம்மாள் மட்டும் தான் மனைவி என்றாலும் சந்திரமதி மாணிக்கத்தின் மனைவியே அல்ல என்றாலும் சரியல்ல, இருவருமே மாணிக்கத்தின் மனைவிதான். பச்சையம்மாள் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் அவர் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பாகவே இறந்து விட்டார். பச்சையம்மாளுக்கும்

மாணிக்கத்திற்கும் எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் நான் பிறப்பதற்கு முன்பே அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது, கல்லூரில் நடந்திருக்கலாம் என் தந்தையை கேட்டால் தான் இடம் சரியாக தெரியவரும். பச்சையம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் திருமணம் ஆன பிறகு நான் எப்போது பிறந்தேன் என்றால் சுமார் 20 ஆண்டுகள் கழித்து பிறந்தேன். நான் பச்சையம்மாள் மாணிக்கம் திருமணத்திற்கு பிறகு 20 ஆண்டுகள் கழித்து பிறந்தேன் என்ற விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பச்சியம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் திருமணம் நடைபெற்று எத்தனை ஆண்டுகள் கழித்து அவர்களுக்கு முதல் குழந்தை பிறந்தது என்றால் சுமார் 20 வருடங்கள் கழித்து வேலு முதல் குழந்தையாக பிறந்தார். வேலு எந்த பள்ளியில் படித்தார் என்றால் முதலில் கல்லுரியிலும், பிறகு ஊத்தங்கரை அரசு மேல்நிலை பள்ளியிலும் படித்தார். வேலு எந்த மருத்துவமனையில் பிறந்தார் என்றால் அவர் எந்த மருத்துவமனையில் பிறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. பச்சியம்மாளின் சொந்த ஊர் எதுவென்றால் பிறந்த ஊர் கோவிந்தாபுரம், திருமணம் செய்து கொடுத்தது கல்லூர் ஆகும். எனது தாயார் சந்திரமதி சொந்த ஊர் எதுவென்றால் அவருக்கும் பிறந்த ஊர் கோவிந்தாபுரம், திருமணம் செய்து கொடுத்தது கல்லூர் ஆகும். மாணிக்கத்தின் தந்தை பெயர் என்வென்றால் காவடிக்கார பெருமாள் ஆகும். 1-ஆம் பிரதிவாதி மாணிக்கத்திற்கு எந்த எந்த சர்வே எண்களில் மொத்தம் எவ்வளவு சொத்துகள் உள்ளது என்றால், கல்லூர் கிராம சர்வே எண்.18/3 மற்றும் 30/1 ஆகியவை சேர்த்து சுமார் 5 ஏக்கருக்கு சற்று குறைவாகவுள்ளது. நான் மேற்சொன்ன இரண்டு சர்வே எண் சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்கள் எதுவும் மாணிக்கத்திற்கு உண்டா என்றால் கல்லூரில் ஒரு ஓட்டு வீடு உள்ளது. அந்த ஓட்டு வீட்டிற்கு மின்சார இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மாணிக்கம் பெயரில் உள்ள சொத்துக்களில் கிணறு உள்ளதா என்றால் ஒரு கிணறு உள்ளது அந்த கிணற்றிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் மின் இணைப்பு உள்ளது. கிணற்றிற்கு மின் இணைப்பு வாங்கி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 20 வருடத்திற்கும் கூடுதலாக இருக்கும். மாணிக்கம் பெயரிலுள்ள சொத்தில் தென்னை மரங்கள் எத்தனை

உள்ளது என்றால் சுமார் 7 மரங்கள் உள்ளது. நான் சொன்ன கிணற்றிற்கு மின் மோட்டார் உள்ளதா என்றால் மின் மோட்டார் உள்ளது. மாணிக்கத்திற்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் மாடுகள் இருந்ததா என்றால், மொத்தம் ரூபாய் 80,000/- மதிப்புள்ள இரண்டு கறவை மாடுகள் இருந்தது. மாணிக்கத்திற்கு இரு சக்கர வாகனம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. மாணிக்கத்திற்கு சொந்தமாக நகைகள் ஏதாவது உள்ளதா என்றால் சுமார் 1 பவுன் அல்லது 2 பவுன் இருக்கும். கல்லூாரில் நான் நடத்திவரும் மளிகை கடை உள்ள இடம் மாணிக்கத்தால் புறம்போக்காக இருந்து ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வந்த நிலம் என்றால் சரிதான், அந்த இடம் 2-ஆம் பிரதிவாதி வேலுவிற்கு பாகமாக கொடுக்கப்பட்ட நிலமாகும். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வேலுவிற்கு அந்த இடம் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட நிலமாகும். திருமாளிற்கு எந்த இடம் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் மாணிக்கம் பெயரில் இருந்து ஓட்டு வீடு சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு வேலுவிற்கு பாகம் கொடுக்கப்பட்ட சமயத்தில் திருமாளிற்கும் பாகமாக கொடுக்கப்பட்டது. வேலுவிற்கு பாகம் கொடுக்கப்பட்ட வீடு, கடை, நிலத்தை நான் எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றேன் என்றால் மொத்தம் சேர்த்து 14,00,000/- த்திற்கு சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கினேன். வேலுவிடமிருந்து மேற்சொன்ன வீடு , கடை, நிலத்தை மாணிக்கம் தான் முன்னிருந்து வாங்கிகொடுத்தார் என்றால் சரிதான், மாணிக்கமும் இருந்தார், திருமாளும் இருந்தார் மற்றும் என் கணவரின் அண்ணன்களும் இருந்தார்கள். 17 ஆண்டுகளுக்கு முன்பு வேலுவிற்கு பாகம் கொடுத்தபோது நிலம் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் சர்வே எண்.30/1-ல் சுமார் 1 ஏக்கர் 70 சென்ட் அல்லது 1 ஏக்கர் 80 சென்ட் சொத்தினை பாகமாக கொடுக்கப்பட்டது. அதே போல் திருமாளிற்கு எந்த சொத்தில் எவ்வளவு நிலம் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் சர்வே எண்.18/3-ல் சுமார் 2 ஏக்கர் அளவுள்ள நிலம் பாகமாக கொடுக்கப்பட்டது. மாணிக்கம் எவ்வளவு நிலத்தை அவருக்கு பாகமாக நிறுத்திவைத்துக்கொண்டார் என்றால் சுமார் ½ ஏக்கர் நிலத்தை நிறுத்திவைத்துக்கொண்டார். மாணிக்கத்திற்கும், வேலுவிற்கும்,

திருமாளிற்கும் இடையே பாகம் ஏற்படுத்திக்கொண்ட நிலங்களை அவரவர் தனித்தனியே 17 ஆண்டுகளாக ஓட்டிவருகிறார்கள் என்றால் சரிதான். 4-ஆம் பிரதிவாதி வசந்தாவிற்கு 1,2,3 பிரதிவாதிகள் எப்போது கிரையம் கொடுத்தார்கள் என்றால் அவர்களுக்குள் பாகம் ஏற்பட்டு சுமார் 2,3 ஆண்டுகள் கழித்து கிரையம் கொடுத்தார்கள். 4-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரையத்தொகையை வைத்துதான் வேலு பெயரில் இருந்த வீடு, மளிகை கடை ஆகியவை ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு அந்த தொகையை வைத்து என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது, அந்த சமயத்தில் நான் எட்டிப்பட்டியில் உள்ள எனது கணவர் வீட்டில் இருந்துவந்தேன். மாணிக்கம் பெயரில் இருந்த கிணற்றை எவ்வாறு வேலுவும், திருமாளும், தண்ணீர் எடுத்து பயன்படுத்திவந்தார்கள் என்றால் ஆளுக்கு ஒரு நாள் வீதம் முறை வைத்து நீர் எடுத்து பயன்படுத்திவந்தார்கள். 4-ஆம் பிரதிவாதி வசந்தா கிரையம் பெற்ற நிலத்தில் என்ன பயிர் செய்துள்ளார் என்றால் கிரையம் பெற்ற போது ஒட்டு ரக மாமரம் இருந்தது, அதனை 4-ஆம் பிரதிவாதி வெட்டிவிட்டு புதியதாக ஜாதி ரக மாமரத்தை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வைத்து தற்போது அது சிறு மரங்களாக உள்ளது. வசந்தா நான் மேற்சொன்ன ஒட்டு ரக மாமரங்களை கிரையம் பெற்று எத்தனை வருடங்கள் வைத்து காய் அறுத்து வந்தார்கள் என்றால் சுமார் 3 ஆண்டுகள் காய் அறுத்து வந்தார்கள் அதன்பிறகு அம்மரங்களை எடுத்துவிட்டு புதிய கன்றுகளை வைத்துவிட்டார்கள். 4-ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற நாள் முதல் கிரைய சொத்தில் அவர்தான் மாமரங்களை பராமரித்தும், நடவு செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வசந்தா கிரையம் பெற்று எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் சுமார் 15 வருடங்கள் இருக்கும். வசந்தா கிரையம் பெற்ற சொத்தினை பொறுத்து வசந்தா பெயரில் பட்டா, சிட்டா உள்ளிட்ட ஆவணங்கள் ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். வசந்தா எவ்வளவு சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் சுமார் 1ஏக்கர் 80 சென்ட் நிலம் கிரையம் பெற்றிருப்பார்.

(4 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்படுகிறது.)